**செய்தி வெளியீடு எண்: 588** **நாள்: 22.03.2024**

## <u>செய்தி வெளியீடு</u>

## <u>மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு மாண்புமிகு ஆளுநர் அவர்கள் கடிதம்.</u>

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு இன்று (22.3.2024) மாண்புமிகு தமிழ்நாடு ஆளுநர் திரு.ஆர்.என்.ரவி அவர்கள் கடிதம் எழுதியுள்ளார். அக்கடிதத்தில், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், 13.3.2024 நாளிட்ட கடிதத்தில் கேட்டுக் கொண்டுள்ளபடி, முனைவர் க. பொன்முடி அவர்களுக்கு தமிழ்நாடு அரசின் உயர்கல்வித் துறை அமைச்சர் பொறுப்பு வழங்கிட ஒப்புதல் அளிப்பதாகவும், இன்று (22.3.2024) பிற்பகல் 3.30 மணிக்கு முனைவர் க.பொன்முடி அவர்களுக்கு கிண்டி ஆளுநர் மாளிகையில் பதவியேற்பு நிகழ்ச்சி நடைபெறும் எனவும் மாண்புமிகு ஆளுநர் அவர்கள் தெரிவித்துள்ளார்.

மேலும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கோரிக்கையை ஏற்று, தற்போது மாண்புமிகு அமைச்சர் திரு.காந்தி அவர்களின் பொறுப்பில் உள்ள கதர் மற்றும் கிராமத் தொழில்கள் வாரியத்தினை மாண்புமிகு அமைச்சர் திரு.ஆர்.எஸ்.ராஜகண்ணப்பன் அவர்களுக்கு ஒதுக்கீடு செய்வதாகவும், அக்கடிதத்தில் மாண்புமிகு ஆளுநர் திரு.ஆர்.என்.ரவி அவர்கள் தெரிவித்துள்ளார்.

**********

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in